2002 அக்டோபர் 28]

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக கட்டடம் இல்லாமல் காவல் துறை அலுவலகம் இயங்கி வந்தது. அதனால் மிகவும் சிரமமாக இருந்தது. அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி எவ்வளவு, எவ்வளவு காலத்தில் அது கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் மொத்தம் 29 மாவட்டக் காவல் அலுவலகங்கள் உள்ளன. 21 மாவட்டக் காவல் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 8 மாவட்டக் காவல் அலுவலகங்கள் – திருவள்ளூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், திருவாரூர், பெரம்பலூர், கரூர் மற்றும் தேனி – வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்டக் காவல் அலுவலகங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், 2001–02 மற்றும் 2002–03 ஆம் ஆண்டுகளில் திருவண்ணாமலை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் 6 கோடி ரூபாய் செலவில் மாவட்டக் காவல் அலுவலகங்கள் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதாவது, திருவண்ணாமலை மாவட்டக் காவல் அலுவலகம் கட்டுவதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவிலேயே பணிகள் தொடங்கி முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பிச்சாண்டி, நன்றி எல்லாம் கிடையாதா?

வினா எண் 25, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

25–

தீயணைப்பு நிலையங்களுக்குக் கட்டடம்

***12889–திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர், வேட்டவலம் ஆகிய இடங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீழ்ப்பெண்ணாத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு, நிலம் தேர்வு செய்யப்பட்டு கையகப்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வேட்டவலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் பணி 13–2–2002–ல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் வேட்டவலத்திலே கட்டடம் கட்டுவதாகவும், கீழ்ப்பெண்ணாத்தூரிலே இடம் தேர்வு செய்யப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். இதுபோன்ற அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்குவதால் அரசாங்கத்திற்கு அதிக அளவில் நிதி இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக பல்வேறு இடங்களிலே அடிக்கடி இடத்தை மாற்றிவிடுவதால், உடனடியாகத் தொடர்பு கொள்வதற்கும் சிரமங்கள் ஏற்படுகின்றன என்ற நிலையைக் கருத்திலே கொண்டு, இப்படிப்பட்ட தீயணைப்பு நிலையங்களுக்கு ஏழையெளிய மக்கள் தீ விபத்தினால் பாதிக்கப்படுகிற காரணத்தினால்—உடனடியாக கட்டடம் கட்ட இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தர சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. திண்டிவனம் சாலையில் சர்வே எண் 282.3–ல் சுமார் 52 சென்ட் தரிசு நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதனைக் கையகப்படுத்த வருவாய்த் துறையினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்து கையகப்படுத்தப்பட்ட பின்னரே அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு கட்டடம் கட்டுவது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும்.

2002 அக்டோபர் 28]

முற்பகல் 10–20

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் பதினோராவது நிதிக் குழுவின் மூலம் 16.50 இலட்சம் ரூபாய் செலவில் நிரந்தரக் கட்டடம் கட்டும் பணி 13–2–2002ல் தொடங்கப்பட்டு, அலுவலக அறை, பண்டக அறை, பணியாளர்கள் ஓய்வு அறை கட்டி முடிக்கப்பட்டு தற்போது ஊர்தி நிறுத்தும் இடத்திற்கு தளம் போடும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 109 நிலையங்கள் சொந்தக் கட்டடங்களிலும், 42 நிலையங்கள் பாதி சொந்தக் கட்டடங்களிலும் மீதி 129 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் நிலையங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்ற நோக்கில் 34 இடங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு 6 கோடி ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டு கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக தீயணைப்பு நிலையங்கள் அமைத்துக் கொடுக்க ஏதாவது வழிமுறைகள் வைத்திருக்கிறீர்களா? மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் எந்தெந்தத் தொகுதிகளிலெல்லாம் தீயணைப்பு நிலையங்கள் இல்லையோ, அந்தந்தத் தொகுதிகளுக்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்கிற விதத்தில், அதிகமான மக்கள் தொகையைக் கொண்டு வாழ்கின்ற பகுதிகளுக்கு அமைத்துத்தர மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்றாலுங்கூட நான் பதில் அளிக்கிறேன். இப்பொழுதே இந்தியாவில் தமிழ்நாட்டில்தான் தீயணைப்பு நிலையங்கள் மிக அதிக எண்ணிக்கையில் உள்ளன. ஒட்டுமொத்த இந்தியாவில் ஏறக்குறைய 23 ஆயிரம் தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் 280 தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. ஆகவே, கூடுதலாக தீயணைப்பு நிலையங்கள் கட்டுகின்ற கருத்துரு தற்போது அரசிடம் இல்லை. ஆனால் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நிலையங்களை சொந்தக் கட்டடங்களாக

மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 34 தீயணைப்பு நிலையங்களுக்கு வாடகைக் கட்டடங்களில் இருப்பவற்றிற்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அப்படி வாடகைக் கட்டடங்களிலே செயல்படுத்தப்படுகிறவற்றின் பெயர்களை அறிந்துகொள்வதற்கு விரும்புகிறோம். அதிலே என்னுடைய மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட கூத்தாநல்லூர், திருத்துறைப்பூண்டி தொகுதிக்கு உட்பட்ட கோட்டூர், இவையெல்லாம் புதிய இடத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவையும் அந்தப் பட்டியலில் வருகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பெண்ணாத்தூர், வேட்டவலம் ஆகிய இடங்களைப் பற்றியதாகும். ஏதோ துணைக் கேள்விக்கு ஓரளவுக்குப் பதில் சொல்லலாம் என்று சொன்னேன். மேலும் இத்தகைய விவரங்கள் தேவைப்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 26, திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

26–

மகளிர் காவல் நிலையம்

***22520–திருமதி ஆர். தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

செஞ்சி வட்டத்தில் மகளிர் காவல் நிலையம் ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,